Regisered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட் வெயார்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

14 JUN 1971 UNDERGRADUATE LIBRARY

மலர் 13 வைகாசி 3 ரபி: ஆகி 19 (13—6—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 121

# அரசியலிலிருந்து விரட்டப்பட்ட குழுவின் திட்டமிட்ட செயல்!

## பயங்கரவாத நடவடிக்கை பற்றி அமைச்சர் குமாரசூரியர்

கோட்டை, சனி

'நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கை அரசியலிலிருந்து விரட்டப்பட்ட குழுவொன்று திட்டமிட்டு நடாத்திய செயல்' என்று தபால் அமைச்சர் செனட்டர் செல்லையா குமாரசூரியர் இன்று கூறினர்.

செனட்சபை இன்று மீண்டும் கூடியபோது அமைச்சர் செனட்டர் குமாரசூரியர் உரையாற்றினர். அவர் பேசுகையில் கூறியதாவது:

அரசியலிலிருந்து மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டவர்கள் அப்பாவி வாலிபர்களைப் பயங்கரவாதத்துக்கு இழுத்துச்சென்றுர்கள். ஒன்றுமறியாத வாலிபர்களை ஆசைகாட்டி மோசம்செய்தார்கள்.

### பிரதமருக்கு பாராட்டு

நெருக்கடியான காலகட்டத்தில் பிரதமர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அவருக்குப் பெருத்த ஆதரவை மேலும் ஏற்படுத்தியுள்ளது. உலகநாடுகள் அவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளன.

பயங்கரவாதிகளின் இழிவான நடவடிக்கைகள் அவர்களுக்கு இனி இந்த யுகத்தில் இந்த நாட்டில் இடமில்லை என்பதைத் தெட்டத்தெளிவாக்கிவிட்டது.

தேசியஅபிவிருத்திக்கு அரசாங்க நடவடிக்கை எடுக்கவிருந்த நேரத்தில், பயங்கரவாதிகளின் நடவடிக்கை அதனை தடுத்து நிறுத்திவிட்டது.

### ஊரடங்கு

இன்று மாலை 10-00 முதல் நாளை காலை 4-00 வரை

## விமானத்தை கடத்த முயன்றான்

நியுயோர்க், ஜூன் 12

துப்பாக்கிமுனையில் ஜெட் விமானத்தை கடத்தும்படி பயமுறுத்திய சம்பவம் ஒன்று நேற்று சிக்காகோவில் நடந்துள்ளது.

வடக்கு வியட்னாமுக்கு விமானத்தைக் கொண்டு செல்லும்படி கத்தினாராம். விமானம் நியூயார்க்கில் இறக்கப்பட்டது. ஆனால் அவனின் துப்பாக்கி வெடித்ததால், ஒரு பிரயாணி மட்டும் கொல்லப்பட்டார். கடத்தமுயன்றவன் பிடிபட்டான்.

## பயங்கரவாதிகளா புரட்சிவாதிகளா?

### எப்படி அழைப்பது என்று ஒருசர்ச்சை

பயங்கரவாதிகளா? புரட்சிவாதிகளா? எப்படி அழைப்பதென்ற ஒரு 'சர்ச்சை' நேற்று அரசியல் நிர்ணயசபையில் கிளம்பியது.

டாக்டர் டபிள்யூ தஹநாயக்க பேசிக்கொண்டிருந்தபோது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை புரட்சிவாதிகள், புரட்சிவாதிகள் என்று அடிக்கடி குறிப்பிட்டுக்கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின குறுக்கிட்டு, "அவர்கள் புரட்சிவாதிகளல்ல, பயங்கரவாதிகள்" என்றார். 'தஹா'வைப் பார்த்து!

"நீர் வேண்டுமானல் பயங்கரவாதிகள் என்று சொல்லும். நான் 'புரட்சிவாதிகள்' என்றுதான் கூறுவேன்" என்றார் ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

### வேலை வாய்ப்பு

கோட்டை, சனி

முன்னேற்றமடைந்து வரும் ஆபிரிக்க நாடான சாம்பியாவில் வேலைவாய்ப்புகள் இருப்பதாக அறியப்படுகிறது. ஏற்கனவே பல இந்தியர்களும், இலங்கையரும் சாம்பியாவில் அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் சேவை செய்கிறார்கள்.

ஆங்கில அறிவு பெற்ற பட்டதாரிகளுக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். பொறியியல் வல்லுனர்கள், டாக்டர்கள், கணக்காளர்கள், தொழில்நுட்ப உதவியாளர், நில அளவையாளர் வரி மதிப்பீட்டாளர் போன்றோருக்கும் அதிக வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது.

திருமண அழைப்பு

மணமகன்:
வைரமுத்து ஞானகுரு
[நில அளவையாளர் மட்டக்களப்பு]

மணமகள்:
சிவசுப்பிரமணியம் பத்மாதேவி

காலம்: 30-ம் திகதி (13-6-71) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5-30 க்கும் 6-30 க்கும் இடையில்

இடம்: தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவில்

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனித்தனி அழைப்பிதழ் அனுப்பவியலாமைக்கு மன்னிக்கவும்.

பி. வைரமுத்துவும். பாரியாரும்
ஞானதெனி வல்வெட்டித்துறை.

சி. வே. சிவசுப்பிரமணியமும் பாரியாரும்
[உரிமையாளர்: ராஜா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம், சுப்பிரமணியன் சோடா கம்பெனி]
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

2838

## 'அவசரகாலச் சட்டம் மிகவும் கவனமாகப் பேணப்படுகிறது!

### அரசியல் நிர்ணய சபையில் கொல்வின்

கொழும்பு, சனி

'அவசரகாலச் சட்டம் மிகவும் செம்மையாகவும் கவனமாகவும் பாதுகாப்பாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது முன்னைய ஆட்சிக்காலத்தில் அவசரகாலச்சட்ட ஆட்சிநடாத்தப்பட்டபோது அதன் அனுபவத்தை நன்குணர்ந்தவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் இப்போது முறையாக நடாத்தப்பட்டு வருகிறது என்று அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா இன்று அரசியல் நிர்ணய சபையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகை

(6ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டாலர்
அலுமினியம்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை மேசைகள், வாங்குகள், நல்ல நிலையிலுள்ள றெமிங்ரன் ஸ்ரான்டெட் தமிழ் தட்டெழுத்து யந்திரம் விற்பனைக்குண்டு. செல்வராஜன், செட்டித் தறை லேன், நெல்லியடி, கரவெட்டி. 3164

அரிசியில்:
16 H. P. என்சின் இரண்டு 12" இரைண்டர்கள் No 7 கல்லர் (Huller) Fan பெட்டி, 5 அந்தர் Avery தராசு மற்றும் Shafts பட்டிகள் முதலியவற்றுடன் விற்பனைக்குண்டு இப்போது வேலை நடந்துகொண்டிருக்கிறது. ஆ. சந்திரசேகரம், புலோலி தெற்கு, புலோலி. 3181

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### விற்பனைக்கு

அச்சகம்:
நல்ல நிலைமையில் அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. 3166

வில்லுப் பூட்டிய 600X16 நான்கு சில்லுடன் கூடிய சக்கரத் திருப்பனுடைய 10'X5 1/2' ட்ரெயிலர் விற்பனைக்குண்டு. 5, ஸ்ரீ வேங்கடேசன்வீதி, யாழ்ப்பாணம். 2492

கார்:
பேர்ஜோ 203 EY தொடருடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். டாக்டர், ஐக்கிய வைத்தியசாலை, ஊர்காவற்றுறை. 3179


## உதைபந்தாட்டம்:

# சென். அன்ரனிஸிடம் பாடும்மீன் தோல்வி

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ் மாவட்டக் கழகங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் 'ஏ' பிரிவுக் கழகம், குருநகர் 'பாடும்மீன்' 'ஏ' பிரிவுக் கழகத்தை வென்றது.

இப்போட்டி ஆரம்பமாகி 15 நிமிடங்களின்பின் சென். அன்ரனிஸ் கழகத்தின் முன்னணி வீரர் செபஸ்தியாம்பிள்ளை முதலாவது கோலைப் போட்டார். இதன்பின் இவர்கள் 'பெனல்டி' மூலம் 2-வது கோலைப் போட்டனர். இதே வீரர் கொன்ஸலஸ் போட்டார். இதைத் தொடர்ந்து இக் கோஷ்டியின் பின்னணி வீரர் பிரான்ஸிஸ் 3-வது கோலை மிக சாதுரியமாகப் போட்டார். இடைவேளையின் போது சென். அன்ரனிஸ் கழகத்தினர் 3—0 கோல்களைப் பெற்றிருந்தனர்.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் சிறப்பாக மோதியபோதிலும் பாடும்மீன் கழகத்தினரால் கோல்கள் போட முடியவில்லை.

இடைவேளையின் பின் பாடும்மீன் கழகத்தினர் 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டனர். இதையடுத்து சென். அன்ரனிஸ் கழகத்தின் முன்னணி வீரர் தேவசந்தன் தமது கோஷ்டியின் சார்பில் 4-வது கோலைப்போட்டார்.

சென். அன்ரனிஸ் கோஷ்டியின் கோல்காப்பு வீரரின் ஆட்டம் சிறப்பாகவும், ரசிப்பாகவும் இருந்தது.

ஆட்ட முடிவில், சென். அன்ரனிஸ் கழகம் 4—1 கோல்களால் பாடும்மீன் கழகத்தை வென்றது

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு பேரின்பநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

### தெல்லிப்பழை வெற்றி

தெல்லிப்பழை கிருஸ்கொம்பன் 'பி' பிரிவுக்கும், குருநகர் யுதிகவுன்ஸில் 'பி' பிரிவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியொன்றில் கிருஸ்கொப்பஸ் 3—2 கோல்களால் வெற்றி பெற்றது. (தே நி)

### பயிற்சிவகுப்பு

அரியாலை, சனி
கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரத்திற்குரிய கனிஷ்ட சாதாரண பயிற்சி வகுப்புக்கள் அடுத்த மாதம் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

### 5000 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள்

கோட்டை, சனி
5000-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை விவசாய சேவைகள் இலாகா வழங்கியுள்ளது.

அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களில் அநேகமானோர் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என மேற்படி இலாகா அறிவித்துள்ளது.

இந்த அடையாள அட்டைகளில் விவசாயிகள் கடன் வசதி, கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொடுத்தல் மற்றும் தங்கள் விவசாயத்துக்குத் தேவையான சகல வசதிகளையும் பெறத்தக்கவாறு குறிப்புகள் உள்ளன.

ச. ச. நிலைய

### ஆண்டுவிழாப் போட்டி முடிவுகள்

ஊர்தீவு, சனி
புங்குடுதீவு - சனசமூக நிலைய ஆண்டுவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் போது இருபத்தைந்து மைல் சைக்கிள் ஓட்டம், 10 மைல் மரதன் ஓட்டம் ஆகியன சிறப்பம்சங்களாக இடம்பெற்றன. சைக்கிள் ஓட்டப்போட்டியை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. சே. சிவேந்திரனும், மரதன் ஓட்டப்போட்டியை ஆசிரியமணி அ. க. சுந்தையாவும் ஆரம்பித்து வைத்தனர். சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை புங்குடுதீவு சென் சேவியர் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த இ. வின்சனும், இரண்டாமிடத்தை புங்குடுதீவு ஆறும் வட்டாரத்தைச் சேர்ந்த க. சின்னத்தம்பியும், மூன்றுமிடத்தை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐ. உலகநாதனும், நான்காம் இடத்தை நசரேத் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பே. அம்பிரட்டும், ஐந்தாம் இடத்தை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த இ. செல்வராசாவும் பெற்றனர்.

பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை நசரேத் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த வே. அருமைநாதனும், இரண்டாம் இடத்தை நசரேத்சனசமூகநிலையத்தைச் சேர்ந்த கு. அம்பிரட்டும், மூன்றும் இடத்தை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த வே. ஆசீர்வாதமும், நான்காம் இடத்தை சென் சேவியர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இஸ்பியாசும். ஐந்தாம் இடத்தை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த ச. சுப்பிரமணியமும் பெற்றனர்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு ரஞ்சன் வெற்றிக் கிண்ணமும், மரதன் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு தங்கப்பதக்கமும் பரிசளிக்கப்பட்டன.

### "கொழும்புத்துறைக்கு விளையாட்டு மைதானம் வேண்டும்"

அரியாலை, சனி
கொழும்புத்துறையில் விளையாட்டுமைதானம் ஒன்று அமைத்து உதவுமாறு கொழும்புத்துறை ஐக்கிய முன்னணிக் கழகத்தினர் யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவை வேண்டியுள்ளனர்.

விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாதது இப்பகுதி இளைஞர்களுக்குப் பெருங்குறையாக இருந்து வருவதாகவும் கொழும்புத்துறையில் உள்ள பரவைக் கடலை நிரவி விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்து கொழும்புத்துறை இளைஞர்களின் ஆவலை யாழ். மாநகர சபை பூர்த்தி செய்யும் எனக் கழகம் நம்புவதாகவும் கழகத் தலைவர் திரு. ப. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது விஷயமாக யாழ். முதல்வரை நரில்சந்தித்துப் பேசவும் கழகத்தினர் மானித்துள்ளனர்.

### விதை கிழங்கு

கோட்டை, வெள்ளி
அவுஸ்திரேலியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கிய 5 லட்சத்து 11 ஆயிரம் ரூபா பெறுமதியான விதை உருளைக்கிழங்கு நாளை கொழும்பு வந்து சேரவுள்ளது


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப. 2-00 5-00
ஜெமினி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

ரீகல் (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி ப.2-30
முத்துராமன், தேவிகா, நாகேஷ் சோ நடித்த
**தேவி**
'தேவி ஸ்ரீ தேவி' பாடலை இத்திரேட்டரில் (Westrex Sound)ல் கேட்டு மகிழுங்கள்
Daily at 6-00 p m Only
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-15, பி. ப. 2-00, 5-15 மணி
☆ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ ★ லக்ஷ்மி நடித்த
**கன்னிப் பெண்**

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

லிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

ஜமலன்
காலை 10, பி.ப 2-00 மணி
பார் மகளே பார்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி பி.ப 2-00, 5-45
எம்.ஜி.ஆர்.-அஞ்சலிதேவி நடித்த
**மர்மயோகி**
(புதிய கொப்பி)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2-30, 5-30
ஜெய்சங்கர்-விஜயநிர்மலா நடித்த
**உயிரா மானமா**

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ராஜன் - நிர்மலா நடித்த
**சக்கரம்**

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
எம். ஜி. ஆர்—பானுமதி நடித்த
**மலைக்கள்ளன்**

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30
முத்துராமன் — லக்ஷ்மி, நாகேஷ் — ராகினி நடித்த
**நவக்கிரகம்**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
யாழ். வின்ஸர் திரையில்
தினசரி காலை 10-30, பி. ப. 2 00 மாலை 5-00 மணி
★ ஜெய்சங்கர் ★ பாரதி ★ சுந்தரராஜன் ★ நம்பியார் ★ நாகேஷ் நடித்த
**நில்! கவனி!! காதலி!!!**

# பாக். ராணுவத்தை வலுப்படுத்தும் உதவிகளை வழங்கவேண்டாம்

## மேற்கு நாடுகளிடம் இந்திய வெளிமந்திரி கோரிக்கை

பாரிஸ், ஜூன். 12

**பாகிஸ்தான் ராணுவத்தை வலுப்படுத்தும் வகையில் மேற்கு நாடுகள் எந்த வித உதவிகளையும் அந்த நாட்டுக்கு தொடர்ந்து வழங்கக் கூடாது என்று இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. சுவர்ண்சிங் இங்கு கூறினார்.**

திரு. சுவர்ண்சிங் நேற்று பிரஞ்சு அதிபர் பொம்பிடோவைச் சந்தித்துப் பேசினார். பாரிஸிலிருந்து லண்டன் புறப்படுவதற்கு முன்னர் அவர் பிரஞ்சு பிரதம மந்திரி திரு ஷாபானை சந்தித்துப் பேசுவார் லண்டனிலிருந்து ஒட்டாவாவுக்கும் பின்னர் நியுயோர்க்கிற்கும் அவர் போவார்.

அதிபர் பொம்பிடோவுடன் பயனுள்ள பேச்சுக்கள் நடத்தியதாக திரு சுவர்ண்சிங் நிருபர்களிடம் தெரிவித்தார். பாகிஸ்தான் தனது ராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்ளும் விதத்தில் மேற்கொண்டும் மேற்கத்திய நாடுகள் உதவியளிக்கக் கூடாது. இப்படி செய்தால்தான் அவர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் கடைப்பிடிக்கும் இனக்கொலை கொள்கையை மாற்றிக் கொள்வர்கள் என்று அவர் சொன்னார்.

கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை குறித்து மேற்கு நாட்டுத் தலைவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைத் தெளிவாகக் கூறுகிறார்கள் இல்லை. உம்மிடம் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கும் விஷயங்களை அவர்கள் வெளிப்படையாகக் கூற முன்வரவேண்டும் என்றார் திரு சுவர்ண்சிங்.

### ஆஸ்திரேலியாவில் கல்வி மந்திரி

இந்தியக் கல்வி அமைச்சர் திரு சித்தார்த்தசங்கராய் நேற்று ஆஸ்திரேலிய பிரதமமந்திரியையும் வெளியுறவு மந்திரியையும் சந்தித்து கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை பற்றியும் இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகளின் கஷ்டங்கள் பற்றியும் விளக்கினார்.

கிழக்கு வங்காள மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்பட வேண்டும் என்று திரு ராய் ஆஸ்திரேலிய பிரதமரிடம் விளக்கியதாகத் தெரிகின்றது.

### நியுயோர்க்கில் ஜெயப்பிரகாஷ்

சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் நேற்று ஐ நா. பொதுச் செயலாளர் யுதாண்டவை சந்தித்து கிழக்குவங்க நிலைமை பற்றி ஆலோசித்தது. கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைக்கு அரசியல் தீர்வு காணாத வரையில் அங்கு அமைதி ஏற்படவே முடியாது என்று அவர் கூறியதாகத் தெரிகின்றது. அகதிகள் பிரச்னை இருக்கும் நிலையில், இந்தியா தற்காப்புக்காக சில நடவடிக்கைகளை எடுக்க நேரலாம் என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

### பிரிட்டிஷ் குழு பயணம்

கிழக்குப் பாகிஸ்தான் நிலைமையை நேரில் அறிந்து வருவதற்காக பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் உள்ள பிரதான கட்சிகளின் அங்கத்தவர்கள் அடங்கிய குழுவொன்று பாகிஸ்தானுக்குப் புறப்பட்டிருக்கின்றது, பிரிட்டிஷ் ஆட்சிமன்றக் குழுவொன்றை விஜயம் செய்யும்படி பாகிஸ்தான் அரசாங்கமே முதலில் கேட்டிருந்ததாம். இந்தக் குழு இந்தியாவிலுள்ள அகதிகளின் நிலைமைகளை நேரில் அறியும் வகையில் பாரதத்துக்கும் விஜயம் செய்ய வேண்டும் என்பதால் அக்குழுவின் பிரயாணச் செலவை பிரிட்டிஷ் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இக்குழு முதலில் மேற்குப் பாகிஸ்தான் சென்று ஜெனரல் யாஹ்யாக்கானை சந்தித்த பின்னர் கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்லும் என்று தெரிகின்றது.

### ஐ. நா. அளிக்கும் உதவி

கிழக்குவங்க அகதிகளுக்கென ஐ. நா. சபை இரண்டாம் யுத்தகாலத்திற்குப் பிறகு மிகப் பெரிய அளவில் நிவாரண உதவிகளை வழங்கியிருக்கிறதாம். கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஐ. நா. அளிக்கும் உதவிகளை பாகிஸ்தான் அதிகாரிகளே வினியோகிப்பார்கள். ஆனால் ஐ. நா. அதிகாரிகள் இதனை மேற்பார்வை செய்வார்கள் என்று கூறப்படுகின்றது.

### கி. பாக் அரசியல் நிலைமை

கிழக்குப் பாகிஸ்தானில் முக்கிய மூன்று நகரங்களில்தான் ஆட்சி ராணுவத்தின் கையில் இருக்கிறதாம் மற்ற இடங்களில் எல்லாம் நிர்வாகம் சீர்குலைந்து கிடப்பதாகக் கூறப்படுகின்றது. சிட்டகாங் துறைமுகப் பட்டினம் வெறிச்சோடிக் கிடப்பதாக அங்கு சென்று திரும்பியுள்ள வங்கிக்குழுவொன்று தெரிவித்துள்ளது.

டாக்கா, ராய்பூர், குல்னா ஆகிய மூன்று நகரங்களில்தான் ஆட்சியாளரின் கட்டுப்பாடு இருக்கிறதாம் மற்ற பகுதிகளில் நிர்வாகம் இல்லையாம்.

சிட்டகாங் துறைமுகத்தில் பேராசிரியர்களும், வேறு பிரமுகர்களும் கூலிவேலைகள் செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவதைத் தாங்கள் கண்டதாக இந்தக் குழுவினர் கூறியிருக்கிறார்கள்.

—

இந்தியாவில்

## 18 வயதினர்க்கு வாக்குரிமை வேண்டுமாம்

புதுடில்லி, ஜூன் 10

18 வயதை அடைந்த ஆணும் பெண்ணும் அரசியலைப்பற்றி நன்கு தெரிந்திருப்பதினால் வாக்குரிமை அவர்களுக்கு வழங்காமலிருப்பது நியாயமற்றசெய்கை. ஆகவே இவர்களுக்கு இவ்வுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான ஒரு மசோதாவை திரு பூபேஷ்குப்தா டெல்லி மேல்சபையில் தாக்கல் செய்துள்ளார். இந்தியாவில் 21 வயதுக்கு மேற்பட்டவர்க்கு மட்டுமே தற்போது வாக்குரிமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

......

## திருப்பதியில் திருட்டு

திருப்பதி, ஜூன் 12

திருப்பதி தேவஸ்தானத்தில் 11 ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது.

இத்தேவஸ்தானம் நடாத்தும் பஸ் போக்குவரத்து சந்தோரில் வேலைபார்த்த ஒரு நபர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் தேடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

—

## புனர்வாழ்வுக்கு நீலகிரியில் 3000 ஏக்கர் நிலம்

சென்னை, ஜூன் 12

இலங்கை பர்மாவிலிருந்து இந்தியா திரும்பி உள்ள தமிழர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்குமுகமாக நீலகிரிமலை ஆனமலை ஆகிய இடங்களில் 3000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது

இப்பகுதிகளில் தேயிலை பயிரிடப்பட்டு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதுடன் 6 கோடி ரூபா செலவில் இதுபற்றித்திட்டமிடப்பட உள்ளது காப்பிஏலக்காய் ரப்பர் முந்திரிகை ஆகிய வற்றை சேலம், கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடவும் தமிழக அரசாங் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் இவர்களின் நலனுக்கருதி வீடுகளும் கட்டப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

மேற்கு நாடுகளுடன்

## படைகுறைப்புப்பற்றிப்பேச்சு நடத்த ரஷ்யா தயாராம்

### பிரஸ்னேவ் சொல்கிறார்

மாஸ்கோ, ஜூன் 12

நேட்டோ — வார்ஸோ படைகளைக் குறைப்பது பற்றி சம்பந்தப்பட்ட நாடுகளுடன் விவாதிக்க சோவியத் யூனியன்தயாராய் இருப்பதாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் பிரஸ்னேவ் தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பா மத்தியதரைக் கடல், இந்துசமுத்திரம் ஆகிய பகுதிகளில் உள்ள வார்ஸோ ஒப்பந்தநாட்டுப் படைகளை குறைப்பதுபற்றி நேட்டோ நாடுகளுடன் பேசுவதற்கு சோவியத் யூனியன் தயாராய் இருப்பதாக பிரெஸ்னேவ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசங்களில் இருக்கும் சோவியத் படைகள் பற்றி அமெரிக்கா பெரிய அளவில் பிரசாரம் செய்துவந்திருப்பதாக பிரஸ்னேவ் குற்றஞ்சாட்டினார்.

ஐந்து அணு வல்லரசு நாடுகளின் கூட்டமொன்று நடத்தப்படவேண்டும் என்றும் திரு பிரஸ்னேவ் யோசனை தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பாவிலுள்ள சோவியத் படைகளைக் குறைப்பதுபற்றி அமெரிக்காவுடன் பேச்சுநடத்த தயாராய் இருப்பதாக சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் சமீபத்தில் கருத்துவெளியிட்டது இங்கு நினைவு கூரத்தக்கது.

## வட்டல்நாகராஜ் மீண்டும் பயமுறுத்துகிறார்

சென்னை, ஜூன். 12

தமிழ்நாட்டிலுள்ள தாளவாடி ஒசூர் தாலுகாக்களில் கன்னட மொழிபேசுவோர் அதிகம் வாழ்கிறார்கள் ஆதலால் இப்பகுதிகளை மைசூர் மாநிலத்துடன் சேர்க்க வேண்டும்,

இவ்வாறு கன்னடர் சங்கத்தலைவர் வட்டல் நாகராஜ் ஓர் அறிக்கைவெளியிட்டு உள்ளார். அவர் மேலும் தமிழ்நாட்டுப்பகுதியை மைசூருடன் இணைக்க வேண்டும். இக்கோரிக்கையை ஏற்காவிடில் ஜூலை மாதம் நடைபெறஉள்ள கன்னடர்கள் மகாநாட்டின் போது புரட்சிகரமான போராட்டம்பற்றி முடிவு செய்யப்படும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

......

## புத்தூக்குவகுப்பு

அரியாலை, சனி

அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் மாவட்ட சமாசங்களின் நிருவாகக் காரியதரிசிகளுக்கும், கல்வி உதவியாளர்களுக்கும் இம் மாதம் 16-ம் திகதி முதல் மூன்று நாட்கள் வரை புத்தூக்கு வகுப்புக்களை நடாத்தும். இவ்வகுப்புக்கள் நடக்கும் மூன்று நாட்களும் 'புதிய கணக்கு முறை' பற்றியும், 'முகாமைப் பிரச்னை' பற்றியும் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் நடைபெறும்.

—

## 5000 விவசாயிகளுக்கு அடையாள அட்டை

சோட்டை, சனி

சுமார் 5000 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயக்கடன் உரம் முதலியவற்றைப் பெறுவதற்கு இந்த அடையாள அட்டைகள் உதவியாகவிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது இந்த அடையாள அட்டை ஒரு வருடத்துக்குச் செல்லுபடியாகும்

## 'மின்சார விஸ்தரிப்பை பயன்படுத்துக'

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு, வேலணை, நாரந்தனை ஆகிய கிராம சபைப் பகுதிகளுக்கான மின்சார விஸ்தரிப்பைத் துரிதப்படுத்துமாறு திரு. கா. பொ இரத்தினம் எம் பி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரைக் கோரியிருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட கிராம சபைப் பகுதிகளுக்கும் ஊர்காவற்றுறைப் பட்டின சபைப் பகுதிக்கும் மின்சார விநியோகம் செய்வதற்கென திரு நவரத்தினம் எம் பியாக இருந்தபோது கடந்த அரசு நிதி ஒதுக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது

ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குள் மின்சார இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மின்சார விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்காவை அழைக்கவிருப்பதாக ஊர்காவற்றுறைப் பட்டின சபைத் தலைவர் திரு பி இம்மானுவல தெரிவித்துள்ளார்.

... ...

## விசேஷ பயிற்சிக்கு இந்தியா செல்கிறார்

மாவிட்டபுரம், சனி

அளவெட்டியைச் சேர்ந்த மு நாகமணி புடவை சம்பந்தமான சாயம், அச்சு முதலியவற்றில் விசேட பயிற்சி பெற 15-ந் திகதி இந்தியா செல்கிறார்.

திரு. வி. முருகையாவின் புதல்வரான இவர் திரு. என். கே. பத்மநாதன், திரு. என். சிதம்பரநாதன் ஆகியோரின் தம்பியுமாவர். முன்பும் இவர் இத்துறையில் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்.

—

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வண்ணை கிழக்கு சந்நிதி மடம் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலயத்தில் நேற்று தொடக்கம் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் சாந்தி மஹோற்சவத்தில் வண்ணை சிவ. வை நித்தியானந்த சர்மா 'திருவிளையாடல்' என்னும் பொருளில் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தி வருகிறார்.

வாடகைக்கு

கடைக்கட்டிடம் - உடன் கிடைக்கும்

சகல வசதிகளும் கொண்ட விற்பனை நிலையம்; 8-வதுகட்டை பலாலிவீதி, கோண்டாவிலில் இ. போ. ச. டிப்போவிற்கு எதிராக. விரும்புபவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

NIKONA SALES

எஸ். நரசிங்கம் ஜே. பி.

நிகோந ஏல நிலையம்

1-வது மாடி. சங்கரப்பிள்ளை கட்டிடம்

166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

இன்று தேர்த் திருவிழா

# பாஷையூரில் கோவில்கொண்ட பதுவையார்

— அ. அன்டர்சன் —

கடவுளை அன்பினால் ஆட்கொண்டவர்களுள் புனித அந்தோனியாரும் ஒருவர். நாளோராயிரம் நவ நவமான அற்புதங்களைச் செய்யும் வல்லமை பெற்ற புதுமைவள்ளலாகிய பதுவை அந்தோனியார், போர்த்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் பிறந்தார். இவரது தந்தையான மாட்டீன் என்பவர் போர்த்துக்கல் ராஜ சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்துவந்தார்.

பக்திவிசுவாசமுடன் வளர்ந்து வந்த புனிதர் குருமடத்திற் சேர்ந்து சிறந்த பிரசங்கியாராக மாறினார். இவரது பிரசங்கத்தைக் கேட்ட 9 ஆம் கிரகோரி பாப்பரசர் அவரை "புதிய ஏற்பாட்டின் உயிருள்ள பெட்டகம்" என அழைத்தார். பிரான்ஸ், இத்தாலி முதலாம் இடங்களுக்குச் சென்று தமது நவமான உபதேசங்களால் பல ஆயிரக்கணக்கானோரை மனந்திரும்பிய புனிதர் தமது 36 வது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது எண்ணற்ற புதுமைகளைக் கண்ணுற்ற மக்கள் அன்னாரின் பெயரால் ஆலயங்கள் பல எழுப்பி அவரை வழிபடத் தொடங்கினர்.

அவ்வாறு அகிலத்தில் கோவில் கொண்டுள்ள பதுவையார் ஈழநாட்டின் வடபாலமைந்த வளம்செறிந்த யாழ். நகரத்தின் மத்தியிலுள்ள பாஷையூரிலும் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளார். இலங்கையிலுள்ள அதி உயர்ந்த ஆலயங்களுள் ஒன்றான புனித அந்தோனியார் ஆலயம் இலங்கையில் ஒரு சித்தி பெற்ற தலமாகும்.

கோவைக்குருவான யுவக்கிம் கபிரியேல் அடிகளாரின் நன் முயற்சியினால் 1844ம் ஆண்டு சிறிதாக அமைக்கப்பட்ட இவ்வாலயம் 1911-ம் ஆண்டு வணதிரு கோதிலே டெலாண்டினால் ரோமன் கட்டிடக்கலை அமைப்பில் திருத்தியமைக்கப்பட்டது.

1962ம் ஆண்டு வீசிய பயங்கர சூறாவளியினால் சேதமடைந்த ஆலயத்தின் சில பகுதிகள் அவ்வமயம் கட்டளைக் குருவாக இருந்த வண. ஏ. வசன் பேர்க் அடிகள் அவர்களால் திருத்தஞ் செய்யப்பட்டது. இந்த ஆலயத்திற்கு மேலும் அழகு கொடுக்கும் கண்கவர் நுழைவாயில் முகப்பு மண்டபத்தினை வண. வே. பி. சந்தியாப்பிள்ளை நிர்மாணித்துக் கொடுத்தார். இக்குருவானவரின் அரும் பெரும் முயற்சிகள் பாராட்டப்படத்தக்கன.

புனித அந்தோனியாரின் பக்தர்களான அவ்வூர் மக்கள் தவமுனிவரின் திருச்சொரூபத்தை ஊர்வலமாக எடுத்து வருவதற்கு முற்றிலும் பூமுதிரையினால் ஆக்கப்பட்டதும் தமிழர் கலை வம்சம் நிறைந்ததுமான தேர் ஒன்றினை வண. ஜே. நீக்கலஸ் அடிகளாரின் கண்காணிப்பில் 1951-ம் ஆண்டு செய்து முடித்தனர்.

அடியார்களுக்கு அருள் புரியும் கோலத்துடன் அன்புக் கரம்நீட்டி வரவேற்று நிற்கும் புனிதரின் ஆலய வருடாந்த உற்சவம் ஆண்டு தோறும் ஆனி முதல் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதின்மூன்றும் நாள் தேர்த்திருவிழாவுடன் முடிவடையும்.

இன்று பலசமயமக்களும் ஒன்றுகூடி திரளாக நிற்க, பாடகர் குழாம் பண்ணிசைத்துவர, மக்கள் ஆரவாரம் கோரி முன்னேவர அடியார்கள் வடம் பற்றி இழுக்க மூன்று மைல் தூரம் வீதிவழிவரும் காட்சி நெகிழவே செய்யும்.



யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் புனித அந்தோனியார் உற்சவம் இன்று மாலை தேர் சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைகிறது. இத்திருநாள் இம்மாதம் 1-ம் தேதி ஆரம்பமானது.

இன்று காலை 5 மணி தொடக்கம் திவ்விய பலிப்பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். காலை 6 மணிக்கு திவ்விய பாடற்பூசை இடம்பெறும் பிற்பகல் 4 மணிக்கு தேர்சுற்றுப்பிரகார ஊர்வலம் ஆரம்பமாகும்.

இன்று இரவு யாழ். துணை ஆயர் எம். ஆர். அன்ரனி ஆண்டகை திருச்சடங்குகளை நடத்தி வைப்பார். பக்தர்களின் வசதிக்காக, சகல இடங்களுக்கும் விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தேவாலய வளவிற்குள் பக்தர்கள் இரவு தங்குவதற்கும் ஊரடங்குச்சட்டத்திற்கு அமைய பொலிசார் விசேஷ அனுமதிவழங்கியுள்ளனர். ஊரடங்கு நேரத்தில் பக்தர்கள் எவரும் தேவாலய வளவைவிட்டு வெளியில் செல்லக்கூடாதெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

நயினை அம்பாள் உற்சவம்

## படகு சேவை மாலை 6க்குப் பின்னர் இல்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் தர்ம கர்த்தா சபையினரும், திருவிழா உபயகாரர்களும், யாத்திரிகர்களுக்கு வசதிகள் செய்யும் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் நயினாதீவுக் கிராமசேவையாளரும் இம்மாதம் 10ந் திகதி மேற்படி ஆலயத்தில் கூடி, ஆலய வருடாந்த உற்சவத்தைப் பற்றியும் அதை உரிய பட்சத்தில் நடத்துவது குறித்தும் ஆராய்ந்தனர்.

நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 24ந் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 9ந் திகதி வரை நடைபெறவுள்ளது. இவ்வாலய உற்சவத்தையொட்டி யாழ்ப்பாணக் கச்சேரியிலும் இம்மாதம் 7ந் திகதி அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் இராணுவம், கடற்படை, பொலிஸ் ஆகியவற்றின் அதிபர்கள், தீவுப் பகுதிக் காரியாதிகாரி ஆகியோரும் சுகாதாரப் பகுதி, பகிரங்க வேலைப்பகுதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் அவசரகாலச் சட்ட விதிகளுக்கமைய ஆலய உற்சவத்தை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட தீர்மானங்கள் 10ந் திகதி நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

நயினாதீவிலிருந்து புங்குடுதீவு மார்க்கமாகப் புறப்படும் யாத்திரிகர்கள் மாலை 6 மணிக்குப் பின்னரும், ஊர்காவற்றுறை மார்க்கமாகப் போகும் யாத்திரிகர்கள் பிற்பகல் 4 மணிக்குப் பின்னரும் புறப்பட அனுமதிக்கப்படமாட்டார்கள் நயினாதீவில் இதன்பின்னர் தாமதிப்பவர்கள் தங்கியிருப்பதற்கு ஆலய எல்லைக்குள் விசேஷ ஒழுங்குகள் செய்யப்படும். பகல் திருவிழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12-30 மணிக்கு முடிவடையும். இராத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு முடிவடையும்.

# நடமாடும் விஞ்ஞானப் பொருட்காட்சி

## 15-ந் திகதி வேம்படியில் ஆரம்பம்

மாவிட்டபுரம், சனி

வடக்கில் முதல் முதலாக நடாத்தப்படவிருக்கும் நடமாடும் விஞ்ஞானப் பொருட்காட்சி இம்மாதம் 15-ந் திகதி வேம்படி மகளிர்கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கிறது.

கிராமங்களில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டு விஞ்ஞான ஆய்வுக் கருவிகளைச் செய்து விஞ்ஞானப் பாடத்தை 6-ம், 7ம், 8-ம் வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கும் நோக்குடன் இந்நடமாடும் பொருட்காட்சி வேம்படி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகி வடமாகாணத்தில் உள்ள பல பகுதிகளிலும் காண்பிக்கப்படவிருக்கிறது. வடமாநிலக் கல்வியதிபதி திரு திரு. டபிள்யு. ஸி. மகாதத்தில இப்பொருட்காட்சியை திறந்துவைப்பார்.

20, 21, 22-ந் திகதிகளில் யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறைத் தொகுதி மாணவர்களுக்காக வேம்படி மகளிர் கல்லூரியிலும், அடுத்த மாதம் 5, 6-ம் திகதிகளில் காங்கேசன்துறை, கோப்பாய்த் தொகுதி மாணவர்களுக்காக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், ஜூலை 12, 13 திகதிகளில் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதி மாணவர்களுக்காக புலோலி ஆண்கள் மகா வித்தியாலயத்திலும் 21-ந் திகதி சாவகச்சேரித் தொகுதி மாணவர்களுக்காக றிபேக் கல்லூரியிலும், 27, 28-ந் திகதிகளில் வட்டுக்கோட்டை, உடுவில் தொகுதி மாணவர்களுக்காக மானிப்பாய் மகளிர் பாடசாலையிலும் இப்பொருட்காட்சி காண்பிக்கப்படும்.

இங்கு இக்கண்காட்சி முடிந்ததும் நாட்டிலுள்ள மற்றும் மாவட்டங்களுக்கு இக்கண்காட்சி எடுத்துச் செல்லப்பட்டு பாடசாலைகள் தோறும் காண்பிக்கப்படுமாம்.

இந்தப் பொருட்காட்சியை நடாத்துவதற்கான ஒழுங்குகளை வடமாநில விஞ்ஞான அதிகாரி திரு. எம். அற்புதநாதன் தலைமையில் 9 ஆசிரியர்கள் செய்து வருகின்றனர்.

## "பெற்றோர் கண்காணிப்பு அவசியம்"

திருக்கோணமலை, சனி

"பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கவனமாகக் கண்காணிக்கவேண்டும். பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய மிகக் கூடுதலான நேரத்தில் பிள்ளைகள் பெற்றோரின் கவனத்தில் இருப்பதால், பெற்றோர்கள் பிள்ளைகளின் நலனில் மிகக் கூடுதலான அக்கறை காட்டமுடியும். இன்றேல் பிள்ளைகளின் வாழ்வில் கறைபடிந்துவிடும்."

நிலாவெளி அரசினர் முஸ்லிம் பாடசாலையில் நடைபெற்ற சிரமதான வைபவத்தில் கலந்துரையாற்றிய திருக்கோணமலை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஜே. சபாநாயகம் மேற்கண்டவாறு தமது பேச்சில் தெரிவித்தார்.

நமது கல்வி அமைச்சரின் திட்டங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் உன்னதமானவை என்றும் திட்டங்களைச் செயல்படுத்த மாணவரும் ஆசிரியரும் ஒத்துழைப்பு நல்குவதோடு பெற்றோரின் பங்கு மிகவும் முக்கியமானதென்றும் அவர் சொன்னார்.

## நியமனம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவுப்பகுதி பதில் இறப்பு, பிறப்பு விவாகப் பதிவாளராக இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த மா. குமாரசாமி நியமனஞ் செய்யப்பட்டுள்ளார். இவர் புங்குடுதீவு கிராமசபையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் கிராமாதிகாரியுமாவார்.

## வைத்திய நிபுணர்களை உடன் நியமிக்கவும்'

மாவிட்டபுரம், சனி

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்களின் இடமாற்றத்தால் மக்கள் படும் கஷ்டத்தை தீர்க்க உடன் வைத்திய நிபுணர்களை நியமிக்கும்படி சுகாதார அமைச்சரை யாழ். ஆஸ்பத்திரிக் கமிட்டி முன்னாள் உறுப்பினரான எஸ். பூபாலசிங்கம் கேட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய முறிவுதறிவு வைத்திய நிபுணர்கள் திரு. பரமேஸ்வரன், திரு. ஆறுமுகம் திரு. இராசையா, திரு. ஜயசூரியா ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டபோதிலும் அவர்களின் இடத்திற்கு இன்னும் இதுவரை வைத்திய நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

பென்சில்வேனியாவில்

## இலங்கையர் ஆராய்ச்சி

கோட்டை, சனி

பேராதனைப்பல்கலைக்கழக மிருகவைத்தியத்துறையைச் சேர்ந்த டாக்டர் ஸ்டனிஸ்லாஸ் டி. பெர்னாண்டோ பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத்தில் சிறுவர்களுக்கு வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளால் ஏற்படும் நோய்கள் பற்றி ஆராய்ச்சியை மேற்கொண்டு உள்ளார் இவ் ஆராய்ச்சியின் பயனாக இத்தகைய நோய்களுக்கு உபயோகிப்பதற்கான தடுப்புமருந்துகளைக் கண்டுபிடிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

## குடத்தனைக்கு மின்சாரம்

அம்பன், சனி

குடத்தனைக் கிராமசபைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து அனுப்புமாறு வடபகுதி மின்சாரப் பொறியியலாளர் குடத்தனைக் கிராமசபை முதல்வரைக் கோரியுள்ளார்.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று அராலி வடக்கு ஸ்ரீ நடராஜர் தேவஸ்தானத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது இதையொட்டி காலை விசேஷ பூஜைகள் ஆராதனைகளும் மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

# நல்லை ஆதீனத்தில் புதிய கலாமண்டபம்

அரியாலை, சனி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் புதிய கலாமண்டபத்திற்கான அத்திபாரக் கல்நாட்டுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள் விசேஷ பூஜைகளை நடத்தியதைத் தொடர்ந்து ஒன்பது நிறங்கள் கொண்ட நவரத்தினக் கற்களை ஒன்பது சிமிழ்களில் இட்டு ஆதீனத்தில் இருந்து யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் உதவி முதல்வர் ஆ. துரைராஜசிங்கம் திரு. க. கனகராசா ஆகியோருடன் ஊர்வலமாக நல்லூர் கந்தசுவாமி கோவில், சிவன் கோவில் ஆகியவற்றை வலம் வந்து பின்னர் புதிய மண்டபத்திற்கான அத்திபாரக் கல் நாட்டப்பட்டது.

யாழ். முதல்வர், உதவி முதல்வர் உட்பட 10 பேர் அத்திபாரத்திற்கான 10கற்களை நாட்டினர். மேற்படி வைபவங்களுக்குப் பிரதம குருவாக பிரம்மஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள் கடமையாற்றினர்.

இம்மண்டபம் வெகுவிரைவில் கட்டிமுடிக்கப்பட்டதும் சமய உபந்நியாசங்களும், நாயன்மார் குருபூஜைகளும் இராமேஸ்வரம் தேவாரப் பாடசாலை மற்றும் வேத பாராயண வகுப்புகளும் இதில் நடைபெறுமாம்.

சைவமக்களின் சமயவளர்ச்சிக்கும், சைவசமயத்தைப் பரப்புவதற்கும் வசதியாக அமையும் இம்மண்டபத்தின் பரிபாலனம், திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளது அருள் ஆணையின்கீழ் நடைபெறுமெனத் தெரிகிறது.

அத்திபாரக் கல்நாட்டு விழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது.

# 'பஸ்ஸில்வைத்து கிழவியைகுத்தினர்கள்'

## பத்தேகம கொலை வழக்கில் சாட்சியம்

காலி, சனி

பத்தேகம நால்வர் கொலை வழக்கு மீண்டும் காலி அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முடிக்குரிய சாட்சி ஒருவர் பஸ்ஸில் இடம்பெற்ற கொலைகள் பற்றி விளக்கிக் கூறினார்.

அசைஸ் கமிஷனர் டி. கியூ. எம். சிறிமானே முன்னிலையில் விசாரணை ஆரம்பமாகியது.

இந்த வழக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரைக் குத்திக் கொன்றதாக பத்தேகமவைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

பத்தேகமையைச் சேர்ந்த 26 வயது சோமதாஸ அபேவிக்கிரம தமது சாட்சியத்தில் கூறியதாவது:

சம்பவ தினம் குறிப்பிட்ட பஸ்ஸில் நானும் பிரயாணம் செய்தேன். மரணமானவர்களை அதற்கு முன்னர் தெரியாது. பஸ்ஸில் வைத்து சீலாவதி என்ற கிழவியையும் றெட்னிகோ என்பவரையும் இருவர் குத்துவதை நான் பார்த்தேன். உடபல றெட்னிகோவைக் குத்தியவர் 4-வது எதிரியை ஒத்திருந்தார். கிணற்றில் வைத்து நந்தாவதி என்ற இளம் பெண்ணை காக்கிச் சட்டை அணிந்த ஒருவர் குத்தினர்.

சந்தேக நபர் அங்கிருந்து போனபின் நான் திரும்பி வந்து எனது பார்சலை எடுத்துக்கொண்டு பத்தேகமைக்குப் போனேன்.

முடிக்குரிய தரப்பில் ஜனாப் ஷிப்லி அஸீஸ் ஆஜரானார். முதல் ஆறு எதிரிகளுக்கும் டபிள்யு. சமகே. டி. வி. டபிள்யு அமராதிவக்கார ஆகியோரின் அனுசரணையுடனும் திரு. ஏ. செராசிங்கவின் உதவியுடனும் திரு. சுமித்த தசநாயக்கா ஆஜரானார்.

செல்வி செனவிரத்ன, செல்வி விஜயசிங்கா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எம். பி. மெண்டிஸ் 7-வது எதிரிக்காக ஆஜரானார்.

# "வடபகுதி 'சிற்றூழியருக்கு வீட்டுத் திட்டம் வேண்டும்'

குருநகர், சனி

வடபகுதியில் உள்ள அரசாங்க சிறு ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்றை அமைத்துக்கொடுமாறு வீடமைப்பு நிர்மாண அமைச்சரை அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்கம் கேட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் யாழ். கிளையின் வேண்டுதலுக்கமைய இக்கோரிக்கையை சங்கம் கேட்டுள்ளது.

குறைந்த ஊதியம் பெற்று பல்வேறு செலவுகளுக்கும் ஈடுகொடுக்கமுடியாது கஷ்டமுறும் சிற்றூழியர்களுக்குக் குடியிருக்க வசதி செய்து கொடுக்க அமைச்சு முன்வர வேண்டுமென சங்கம் கோரியுள்ளது. ஏனைய மாகாணங்களைப் போலயாழ். மாவட்ட ஊழியர்களுக்கும் வீடமைப்புத்திட்டம் ஏற்படுத்த வேண்டியது அவசியம் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## திறப்புக் கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் மு. நவரத்தினம் என்பவரால் கண்டு எடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## கடலட்டை மூலம் ரூ: 40 ஆயிரம்

அரியாலை, சனி

யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூருக்கு கடலட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதின் விளைவாக வடபகுதி கடற்றொழிலாளர் சங்கம் இம்முறை சுமார் 40 ஆயிரம் ரூபாவை அந்நிய செலாவணியாகப் பெற்றுள்ளது. சுமார் பத்து தொன் கடலட்டை ஏற்றுமதி செய்யப்பட்டதாம்.

## மதுரை ஆதீனத்தில் சம்பந்தர் விழா

மதுரை, ஜூன் 15

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளது குருபூசை மகோற்சவம் இம்மாதம் 10ம் திகதி நடைபெற்றது. இதனை முன்னிட்டு தேவார விழாவும், தேவார இன்னிசை அரங்குகளும் இடம்பெற்றன. மதுரை ஆதீன யாழ்ப்பாணக்கிளை மடாலய அதிபர் மதுரகான கதாரத்தினத் தவமுனி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சம்பந்தப் பெருமானைப் பற்றியும், திருமுருக கிருபானந்தவாரியார் அப்பர் சுவாமிகளைப் பற்றியும் மதுரை ஆதீன சித்தாந்த சைவ வித்தகர் வயிநாகரம் வே. ராமநாதன் செட்டியார் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இம்மாதம் 6ம் திகதி தொடக்கம் மடாலயத்தில் விசேஷ ஆராதனைகளும் வழிபாடுகளும் நடைபெற்றன.

வடக்கில்

## தும்பு உற்பத்தித் திட்டம்

அம்பன், சனி

வெளிநாடுகளிலிருந்து தும்பு இறக்குமதியை அரசாங்கம் தடை செய்துள்ளதால் வருங்காலத்தில் உள்ளூரில் தும்பு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டுமெனவும் இதற்கான திட்டமொன்றினை யாழ். மாவட்ட விவசாய அதிபர் தயாரித்துள்ளதாகவும் இத்திட்டம் விரைவில் செயலாற்றப்படவிருக்கிறதாகவும் தென்னந்தும்பு அதிகமுள்ள இடங்களிலேயே இத்தொழில் முதலில் செயல்படுத்தப்படவிருக்கின்றதெனவும் அம்பன் இளம் விவசாயிகள் கழகப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. வ. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது விவசாய விரிவாக்கச் சேவையாளர் திரு. ஏ. வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

திருவாளர்கள் இ. கணேசன், வே. தம்பையா ஆகியோரும் பேசினர்.

## 'இவர்களுக்கு பதில் நியமனம் வழங்கவும்'

குருநகர், சனி

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க அலுவலகப் பணியாளர் சேவை 2-ம் தர ஊழியர்கள் தொகை குறைவாக உள்ளதால் பணியாளர் சேவை 3-ம் தரத்திலுள்ள ஊழியர்களுக்குப் பதில நியமனம் கொடுக்குமாறு கோரும் கடிதமொன்றை அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளை அரசாங்க நிர்வாகப் பணியாளர் திணைக்கள அதிபதிக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

யாழ். மாவட்டக் காரியாதிகாரிகள் அலுவலகங்களிலும் கச்சேரியிலும் 2-ம் தர கனிஷ்ட ஊழியர்களின் தொகை குறைந்திருப்பதால் அலுவலகங்களின் அன்றாடக் கடமை செவ்வனே செய்ய முடியாத குறை இருந்து வருகிறதாம். கனிஷ்ட ஊழியர் 3-ம் தரத்திலுள்ள ஊழியர்களுக்கும் நியமனம் கொடுத்து இக்கஷ்டங்களைக் குறைக்குமாறு சங்கச் செயலாளர் திரு எஸ் ஆறுமுகம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆழ்கடல் சென்ற மூவர் நிலை என்ன?

## ஒருவாரமாகத் திரும்பவில்லை

— அம்பன் நிருபர் க. க. ஐயாத்துரை —

அம்பன், சனி

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மூவர் ஒருவாரமாகியும் கரைதிரும்பாதது இப்பகுதியில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தாளையடியிலிருந்து இந்த நால்வரும் கடந்த 6-ம் திகதி மீன்பிடிப்பதற்கு இயந்திரவள்ளத்தில் கடலுக்குச் சென்றனர்.

நாகர்கோவில் கரையூரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை காத்திலிங்கம் (வயது 22), வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (வயது20), முருகேசு அமிர்தரத்தினம்(வயது 21) ஆகிய மூவருமே மீன்பிடிக்கச் சென்ற மூவருமாவர். இயந்திரவள்ளத்தின் உரிமையாளரான நா. நாகமுத்து என்பவர் இதுபற்றிப் பருத்தித்துறைப்பொலிஸில் அறிவித்துள்ளார்.

பிரஸ்தாப வள்ளம்கடலில் ஆழ்ந்திருக்கலாமெனவும் மீனவர் மூவரும் நீந்தி வேறுகரை அடைந்திருக்கலாம் அல்லது ஏதும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது. சில வலைகள் கடலில் மிதந்ததாயும் அவற்றை எடுக்க முயன்றபோது எடுக்கமுடியாதபடி அவை எதிலோ மாட்டிக்கொண்டிருந்ததாயும் காணாமற்போனவர்களைத்தேடுதல் முயற்சியில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனவர்களின் வரவை எதிர்பார்த்துஇரவு பகலுமாகச்சோகமே உருவெடுத்த நிலையில் கடற்கரையில் காத்திருக்கின்றனர்.

## 5 தொழிற் சங்கங்கள் நிதி வழங்கும்

குருநகர், சனி

அண்மையில் இந்நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க சொத்துடைமைகளை திருத்திச் சீரமைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள மறுசீராக்க நிதிக்கு யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க ஊழியர்கள் தங்கள் ஒருநாள் சம்பளத்தைக் கொடுத்துதவுமாறு கோரும் வேண்டுகோள் ஒன்றை யாழ் மாவட்டத்தில் உள்ள ஐந்து தொழிற்சங்கங்கள் கூட்டாக விடுத்துள்ளன.

இவ்வேண்டுகோளில் அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், தற்காலிக லிகிதர் சேவைச்சங்கம், அகில இலங்கை தட்டெழுத்தாளர் சங்கம் ஆகியன கைஒப்பமிடப்பட்டுள்ளன.

## கரபந்தாட்டம்

அம்பன், சனி

வடமராட்சிவடக்கு கிழக்கு காரியாதிகாரி பிரிவில் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடாத்தப்பட்டுவரும் கரபந்தாட்டப்போட்டி இம்மாதம் 27ந் திகதி அம்பனிலுள்ள குடத்தனைக் கிராமசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இதில் குடத்தனைக் கிராமசபைப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் கோஷ்டிகளே கலந்துகொள்ளும். வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

## 16ம் திகதி ஆரம்பம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கொக்குவில் பொலிடெக்னிக் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மாலைநேரப் போதனை வகுப்புகள் எதிர்வரும் 16-ந் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகுமென்று பொலிடெக் அதிபர் திரு சீ. டீ. ஜெயசிங்கம் அறிவித்துள்ளார். தற்பொழுது பகல் நேரப் போதனையின் வகுப்புகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன.

## மடம் அமைக்க முயற்சி

குருநகர், சனி

மண்டைதீவில் இருக்கும் சுடுகாட்டில் தங்குமடம் ஒன்றைக் கட்டுவதற்கு மண்டைதீவு தெற்கு கிராமமுன்னேற்றச் சங்கம் முயற்சியெடுத்து வருகின்றது. இந்த மடம் கட்டும் வேலையை இக்கிராமத்தில் உள்ள வாலிபர்கள் சிரமதானமூலம் செய்துமுடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாடசாலை புதிய நேர அறிக்கை

கோட்டை, சனி

பாடசாலை புதிய நேர அட்டவணைப்படி நடைபெறும் வேலைகள் பற்றி அறிக்கை தயாரித்து அனுப்புமாறு கல்வியமைச்சு சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளது.

இம்மாதம் 9-ந் திகதியிலிருந்து ஆரம்பமான புதிய பாடசாலை நேரம் நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் வேலை செய்ய இயலாது போன 21 நாட்களின் வேலையையும் கவனிப்பதற்காகவும், பரீட்சார்த்தமாய் பார்ப்பதற்கும் கொண்டுவரப்பட்டது எனவும் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாம்பு தீண்டி சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரவம் தீண்டிச் செல்வி பௌல்னுருபி என்ற 10 வயது சிறுமி மரணமானார். மீசாலைக்கு அருகேயுள்ள வெம்பிராய் என்னுமிடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. ரூபியும் மற்றும் இரு பிள்ளைகளும் தங்கள் வீட்டிலுள்ள கொய்யாமரத்தில் பழம் பறித்துக் கொண்டிருந்தபோது புடையன் பாம்பு மூன்று தடவை சிறுமியைக் கொட்டியது. விஷக்கடி வைத்தியரிடம் உடன் எடுத்துச் சென்றும் பலனளிக்கவில்லை.

(கு. வி. ம.)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 24-ந் திகதி நடைபெறவிருக்கிறது. 18-ந் திகதி வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பிக்கும்.

மணிவாக்கு

துன்பத்திற்கு காரணம் ஆசையே அதை ஒழித்தால் தான் ஆனந்தம் உண்டாகும். —புத்தர்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 30-ந் திகதி (13-6-71)

## அரசியல் நிர்ணயசபையும் அடிப்படை உரிமைகளும்

நமது நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபத்துமூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. சுதந்திரம் கிடைத்த இத்தனை ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் நாட்டின் பிரச்சினைகள் அதிகரித்து வந்துள்ளனவேயன்றி குறைந்ததாக இல்லை. பிரச்சினைகளின் உச்சக்கட்டத்தையே இன்று நாடு அனுபவித்து வருகிறதென்றும் சொல்லலாம். நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சி பீடத்துக்கு வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஏதேதோ முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனவென்பதையும் மறுப்பதற்கில்லை. ஆயினும் அரசியல் போட்டி, அதிகார ஆசை பதவிமோகம் என்பவை இந்த முயற்சிகளுக்கு இடையூறாக இருந்து வந்திருக்கின்றனவென்பதையும் பலரும் ஒப்புக்கொள்வர்.

கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளிலும் நாடு அனுபவரீதியாகக் கண்டறிந்த உண்மைகளிலிருந்து நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் இன்றைய அரசியல் அமைப்பே அடிப்படைக் காரணமென்பதைப் பலரும் உணர்ந்து கொண்டனர். இதனால்தான் அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் அல்லது புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற குரல் பல பகுதிகளிலிருந்தும் எழுந்தது. கடந்த தேர்தலில் கூட்டணிக் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கப் போவதாக உறுதியளித்திருந்தனர். தேர்தலில் அவர்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகள் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்தனர். வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை இரண்டு கொத்து அரிசி ஆகிய இரு வாக்குறுதிகளுக்குத்தான் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் அவர்கள் ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள் என்று சிலர் கூறுவதில் உண்மையிருந்தாலும் இல்லாவிட்டாலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவோம் என்ற உறுதிமொழியடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பெரும்பான்மையுடன் கூட்டணியினரை ஆட்சிபீடத்துக்கு அனுப்பியதை மறுக்க முடியாது. எனவேதான் இன்று நாட்டில் பெரும் பிரச்சினை தோன்றியுள்ளபோதிலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் காட்டும் அக்கறையையும் ஆர்வத்தையும் குறை சொல்வதற்கு இடமில்லாதிருக்கிறது.

ஆனாலும் சென்ற பொதுத் தேர்தலில் கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஐக்கியதேசியக் கட்சி கூட்டம் அதனுடன் முன்னர் கூட்டுச் சேர்ந்திருந்த கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகள் பெரும்பான்மையாக வெற்றியீட்டியதையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். உணவு, உடை இருப்பிடம் ஆகிய மனிதனின் முக்கிய பிரச்சினைகளுடன் மனிதனின் அடிப்படை உரிமைகள் போதனை மொழி ஆகிய பிரச்சினைகளும் சென்ற பொதுத் தேர்தலில் பிரச்சாரத்துக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன.

இன்றைய அரசியல் அமைப்பைநீக்கி புதிய அரசியல் அமைப்பை ஆதாவது சென்ற பொதுத் தேர்தலில் வாக்களித்தபடி 'சோஷலிஸ ஜனநாயகக் குடியரசை' அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம் என்று ஆளும் கட்சியினர் கருதுவதில் தவறிருக்க முடியாது.

ஆனாலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பெரும்பொறுப்பும் கடமையுமுள்ள அரசியல் நிர்ணய சபை (ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் அங்கம்வகிக்கும் சபை) ஆளும்கட்சியினருக்குக் கிடைத்துள்ள பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு, மக்களால் தெரிவு செய்யப்பட்ட இதர பிரதிநிதிகள் கட்சிகளின் யோசனைகளையும் திருத்தங்களையும் நிராகரித்துவிடுவது நியாயமாகத்தோன்றவில்லை.

சிறுபான்மையினர் பிரச்சினை இந்தநாட்டில்இல்லையென்று எவரும் சொல்லத் துணியமாட்டார்கள். புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் போதாவது இந்தப் பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட வேண்டும். ஆட்சிமன்றத்திலும் பொதுமேடைகளிலும் பத்திரிகைகளிலும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் இதுவரை கொடுத்து வந்த வாக்குறுதிகள் சிறுபான்மையினரின் ஐயத்தையும் அச்சத்தையும் நீக்காதபோது அரசியல் நிர்ணய சபையில் கொடுக்கும் வாக்குறுதிகள் மட்டும் நீக்கிவிடுமா?

எனவேதான் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளும் ஆளும்கட்சி மற்றும் பெரும்பான்மை அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துபேசி நாட்டின் அமைதியையும் தேசிய ஐக்கியத்தையும் பேணிப்பாதுகாக்கக்கூடிய நாட்டை முன்னேறச் செய்து சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணக் கூடிய பொருளாதார சுதந்திரமும் சமத்துவமும் கிடைக்கக்கூடிய புதிய அரசியல் அமைப்பை பிளவு, பிரிவு என்ற வேறுபாடின்றி ஒருமனதாக உருவாக்கவேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளதென்பதை எடுத்துக் காட்டவேண்டியது அவசியமாகின்றது.

அரசியல் அமைப்பு ஒரே மனதாக உருவாக்கப்பட வேண்டுமென்று மறைந்த மேதை ஜவஹர்லால் நேரு இந்திய அரசியல் நிர்ணய சபையில் வலியுறுத்தியதை நாம் மீண்டும் இங்கு நினைவூட்டுவது பொருத்தமென்றே கருதுகின்றோம். அரசியல் நிர்ணய சபை அங்கத்தவர்களும் ஆட்சியாளர்களும் கவனத்தில் கொள்வார்களா?

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா யாழ். மாவட்டத் தணிக்கை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் அனுமதியுடன் தணிக்கை செய்யப்படாமல் இந்த ஆசிரியதலையங்கம் பிரசுரிக்கப்படுகிறது.

## 3000 ஆசிரியர்களுக்கு பதவிஉயர்வு

கோட்டை, சனி

3000 உதவியாசிரியர்கள் விரைவில் 2-ம் தர தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் படவுள்ளனர்.

அடுத்தமாதம் முற்பகுதியில் இந்நியமனத்துக்காக நடக்கவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு 4000 ஆசிரியர்கள் தோற்றவுள்ளனர்.

2000 முதலாம்தரத்தலைமை ஆசிரியர்களையும் நியமிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

—

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் பத்திரிகைக்கலைத் துறை பயின்ற இறுதி வருட மாணவர்களின் இறுதிப் பரீட்சையின் ஒருபகுதியான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 17ந் திகதி நடைபெறவுள்ளது. இப்பல்கலைக் கழகம் கொக்குவில் பல்கலைத் தொழில்நுட்பக் கழகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதினால் அங்கு இந் நேர்முகப் பரீட்சை நடைபெறஉள்ளது. எனத்தெரியவந்துள்ளது

—

## சம்பந்தர்வழி ஒழுகுவோம்

தாவடி, சனி

"வேத நெறி தழைத்து ஓங்கவும், மெய்ச்சமயமாகிய சைவசமயமும், தமிழும் மேன்மேலும் வளரவும் பாடுபட அவதாரம் செய்த அவதார புருஷரே திருஞானசம்பந்தர். அவர் அருளிய திருமுறை நெறிவழியொழுகி இன்ப வாழ்வு பெறுவோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற, திருஞானசம்பந்தர் குருபூசை வைபவத்தில் கலந்துரையாற்றிய பண்டிதை திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் மேற்கண்டவாறு கூறினார். கல்லூரித் தேவார ஆசிரியர் திரு எஸ் இராசையாவினதும் மாணவர்களினதும் தேவார பாராயணமும் நடைபெற்றது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ரஷ்ய ஆய்வு கூடம் 'சலுயூட்'

## வீரர்கள் இரவுபகலாக பணி யாற்றுகின்றனர்

மாஸ்கோ, ஜூன் 12

பூமியை இப்போது வட்டமிட்டுக்கொண்டிருக்கும் சோவியத் ஆய்வுகூடமான 'சலுயூட்'டில் உள்ள விண்வெளி வீரர்கள் மூவரும் இரவு பகலாகப் பணியாற்றுகிறார்கள்.

நெருக்கடியான பிரயாணத்தை மேற்கொள்வதற்காக ஒருவர்மாறி ஒருவராக மாற்றி மாற்றி ஓய்வு எடுத்துக்கொண்டு தமது அலுவல்களைக் கவனிக்கின்றனர்.

ஆறுதடவைகள் பூமியை 'சலுயூட்' சுற்றியபோது வீரர்களுக்கு எதிர்பார்த்தது போல் தலைசுற்றவில்லை என்று 'டாஸ்' அறிவிக்கிறது. மனித உடல் எடையின்மை நிலையிலும் சமாளிக்கக்கூடிய தென்பதை வீரர்கள் தமது அனுபவத்தில் தெரிந்துகொண்டனர்.

## புத்தளம் இடைத்தேர்தல்
### ஜூலை 10ல் நியமனப் பத்திரம்

கோட்டை, சனி

புத்தளம் ஆட்சிமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்காக நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் பத்தாம் திகதி தாக்கல்செய்யப்படவுள்ளது. நியமனப்பத்திரங்கள் அன்றையதினம் காலை பத்து மணி முதல் பதினொரு மணிவரை புத்தளம் கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்படும். மறைந்த எம். பி. ஹசன் குத்தூஸ் (ஸ்ரீ லங்கா) காலமானதைத் தொடர்ந்து இத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது.

## பஸ்ஸில் புகைக்கத் தடை!
### மீறினால் பொலிஸ் விருந்தாளி

கோட்டை, சனி

பஸ் 'புகை'ஞர்களுக்கு சங்கடம் வருகிறது. இம்மாதம் 15-ம் திகதியிலிருந்து இ போ ச பஸ்களில் புகைக்கக்கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது! மீறிப் புகைப்பவர்கள் உடனடியாகவே பஸ் போய்க்கொண்டிருக்கும் இடத்துக்குப்பக்கத்திலுள்ள பொலிஸ்நிலையத்துக்கு அந்த பஸ்ஸில் 'விருந்தாளி'யாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

"பஸ் வண்டிகளில் புகைப்பதானால் பிரயாணிகள் அல்லலுக்குள்ளாகின்றனர். ஒருவர் ஊதிவிடும் புகை மற்றவர்களுக்கு துன்பத்தை விளைவிக்கிறது. எளிதில் தீப்பிடித்துவிடக்கூடிய ஆடைகளை பிரயாணிகள் பலரும் இப்போது அணிவதால், சிகரெட்டை கையில் வைத்துக்கொண்டு ஓடும் பஸ்ஸில் பயணம்செய்வது மிகவும் ஆபத்தானது. ஆபத்தையும், துன்பத்தையும் விளைவித்துவிட்டு 'தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்' என்ற வார்த்தைகளைக் கூறிவிடுவதால் எவ்வித பயனும் உண்டாகாது" என்று இ போ ச பொதுமக்களுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15-ம் திகதிக்கு பின் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் எவராவது தடையை மீறி புகைத்தால் அவர்களை புகைக்க வேண்டாமென பஸ் கண்டக்டர் கேட்டுக்கொள்வார்: அவருடைய சொல்லையும் கேட்காமல் புகைக்கும் பட்சத்தில் பஸ்ஸை அருகில் உள்ள பொலிஸ்நிலையத்துக்கு செலுத்திச்செல்லும்படி பஸ் சாரதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

டபிள்டெக்கர் பஸ்ஸின் மேல்தட்டில் பிரயாணம் செய்பவர்கள் யாராவது விரும்பினால் புகைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அவசரகால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் கூறியதாவது:-

அவசரகாலச் சட்டம் பற்றி விவாதிக்க வரும்படி இப்போது சிலர் வீராப்புப் பேசுகிறார்கள். அப்படி விவாதித்தால் 'வீராப்பு' பேசுபவர்கள் வெட்கித் தலைகுனிந்து வால்களை மடக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓட வேண்டிய நிலை ஏற்படும்.

காட்டுக்குள் ஓடும்போது இவர்கள் எம்மிடமிருந்து மட்டுமல்ல பயங்கரவாதிகளிடமிருந்தும் தப்பிவிட முடியாது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்துவதன் அபாயத்தை நன்குணர்ந்தவன் நான் அதனால்தான் அந்த அவசரகாலச்சட்டத்தை மிகவும் முறையாக நடாத்தி வருகிறோம். இதன் அபாயத்தை நன்குணர்ந்தவர்கள் பலர் எமது அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் இதற்கு முன்பு இல்லாத முறையில் கவனமாக நடாத்தப்பட்டு வருகிறது. தேவையின்றி நிச்சயமாக கருதப்பட்டாலேயொழிய எந்தவிதமான தேவையில்லாத நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை,

இதற்கு முன்பு, ஆட்சியிலிருந்தவர்கள் நடத்திய அவசரகாலச் சட்டத்திலும்பார்க்க இம்முறை மிகவும் பாதுகாப்பாகவே நடாத்தி வருகிறோம்,

**'புரட்சி' பற்றி தஹா**

டாக்டர் டபிள்யு தஹநாயக்கா பேசுகையில் கூறியதாவது:

ஏப்ரல் மாதம் 5ம் திகதி நடந்த புரட்சி உங்கள் அரசாங்கத்துக்கு எதிராக நடந்த புரட்சியல்ல. 20 வருட காலமாக நம்மால் சீர்செய்யமுடியாத குறைபாட்டை எதிர்த்து நடந்த புரட்சியே இது. இதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நீதிமன்றம் போன்ற மக்களின் வாழ்க்கையில் முக்கியமாகச் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு விரைவாகச் செயல்படாததும் இப்புரட்சிக்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

எகிப்ட்டியாவில் 'பயங்கரவாதி'கள் நடாத்திய 'நீதிமன்ற விசாரணை'யொன்றை தஹா இக்கட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

12 வருட காலமாகத் தீர்த்துவைக்காத காணித்தகராறுவழக்குஒன்று சிலநிமிட நேரத்தில் 'புரட்சிவாதிகள்' தீர்த்துவைத்தனர் விரைவாக செயல்படவேண்டுமென்பதும் 'புரட்சி'யின் முக்கிய நோக்கமென்பது இதிலிருந்து புலனாகிறது என்று 'தஹா' கூறினார்.

### பயங்கரவாதி...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

காலத்தில் இந்த நாட்டின் சாபாத்து அரசாங்கத்தின் பிரதமராக இருந்த தஹா!

...லீரி.